# தலைவி

**இணைந்த கரங்கள்**
**பெண்கள் விழிப்புணர்ச்சி**
**இணையங்களின் ஒன்றியம்**
**செய்திமடல்**

**செங்கோல் 2 மன்றம் 3** **ஜனவரி 2004**


## **தலைவியின்** பார்வையில்............

சகோதரிகளுக்கு எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். மலர்ந்திருக்கின்ற 2004ம் ஆண்டில் இணைந்த கரங்களின் அங்கத்தவர்கள் யாவரும் பல துணிகரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு தங்களைச் சுற்றிப் பல மாற்றங்களைத் தோற்றுவிக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றோம். கடந்த வருடம் நீங்கள் இயங்கக்கூடிய பல வழிகளைத் தலைவி காட்டித் தந்தது. அப்படியே இந்த வருடமும் நாம் உறுதுணை யாக நிற்போம்.

வருகின்ற மார்ச் 8ந் திகதி சர்வதேச பெண்கள் தினம் வருகின்றது. இது போன்ற தினங்கள் ஒரு பிரச்சனை அல்லது விடயத்தைப் பற்றி மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்கே பிரகடனப் படுத்தப்படுகின்றன. பெண்கள் தினமும் அவ்வாறே. ஒவ்வொரு நாட்டிலும் பிரதேசத்திலும் பெண்கள் எதிர்நோக்கும் சில பிரத்தியேகப் பிரச்சனைகளை நினைவு கூர்ந்து சிந்தித்து அவற்றிற்கான தீர்வு காண சர்வதேசப் பெண்கள் தினம் உதவுகின்றது. இதிலிருந்து, இத்தினத்தினை நாம் ஒரு நாள் மட்டும் அனுசஷ்டித்து விட்டால் போதாது என்று உங்களுக்குப் புரியும். அடுத்து வரும் வருடத்தில் அல்லது வருடங்களில் நாம் முன்னெடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்கும் படிக்கல்லாக சர்வதேச பெண்கள் தினம் உதவுகின்றது.

சகோதரிகளே நீங்கள் இந்த வருடத்திலும் சர்வதேசப் பெண்கள் தினத்திற்காக ஏதும் நிகழ்வுகளை நடத்தத் திட்டம் போட்டுக் கொண்டிருக்கலாம். இதைச் செய்ய முன்பு சென்ற வருடம் என்ன செய்தீர்கள் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் செய்த நடவடிக்கையின் பலன்கள் எவை? அவை இன்றும் தொடருகின்றனவா அல்லது அத்தினத்துடனேயே, சில கலாசார நிகழ்வுகளுடனேயே, முடிந்து விட்டதா? தயவு செய்து சர்வதேச பெண்கள் தினத்தை பெண்கள் விழிப்புணர்வுக்கும் நடவடிக்கைக்குமான முற்றுப் புள்ளியாக இருக்க விடாதீர்கள். அது பெண்களின் முன்னேற்றத்தை படிப்படியாக ஒவ்வொரு படிநிலைக்கு இட்டுச் செல்லும் காற்புள்ளியாக ஆக்குங்கள்.

2004ம் ஆண்டு மார்ச் மாதம் 8ந்திகதி பெண்களின் எந்தப் பிரச்சனைகளை தீர்வுக்காக எடுக்கப்போகிறீர்கள் சகோதரிகளே. உடனடியாக எமக்கு எழுதி அனுப்புங்கள். நீங்கள் இப்பிரச்சனை பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் தோற்றுவிக்கவும், அப்பிரச்சனையைத் தீர்க்க தீர்மானம் எடுப்போர் செயற்பட வைக்கவும் செய்யவேண்டிய நடவடிக்கைகளுக்கான சகல ஆதரவினையும் வழங்குவோம்.

துணிந்தெழுங்கள், வெற்றி கொள்ளுங்கள்!

பெண்களின் எழுச்சி! சமூகத்தின் உயர்ச்சி!

வாழ்த்துக்களுடன்,
ஆசிரியர்




**வவுனியாவைச் சேர்ந்த விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம், பெண்கள் 50:50 வீதம் அரசியல் பிரதிநிதித்துவம் பெறவேண்டு மெனக் கோரும் பிரச்சாரத்தை முன்னெடுத்தது. இதற்காக அதையொட்டிய சுலோகம் தாங்கிய படத்தை 2004ம் ஆண்டிற்குரிய ஒரு மேசைக் கலண்டராக அச்சிட்டு தமிழ் பேசும் பிரதேசங்களிலுள்ள சகல அரசு, வங்கி மற்றும் அரசுசாரா நிறுவனங்களுக்கு விநியோகம் செய்தது.**

*தலைவிக்கான ஆக்கங்களும் கடிதங்களும் ஒவ்வொரு மாதத்தின் 10ந்தேதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திச் சிதறல்கள்

கவிஞை குட்டி ரேவதியை இலக்கிய இரசிகர்கள் அறிந்திருப்பீர்கள். "பூனையைப் போல் அலையும் வெளிச்சம்" என்ற கையடக்கக் கவிதைத் தொகுதியை ஆகஸ்ட் 2000ம் ஆண்டு வெளிக்கொணர்ந்தவர் இவர்.அவரது இரண்டாவது கவிதைத் தொகுதியும் அண்மையில் வெளிவந்துள்ளது. குட்டி ரேவதி "பனிக்குடம்" என்ற பெயரில் குறிப்பாக கவிஞைகளுக்கான ஒரு கவிதை இதழை நடத்தி வருகின்றார். பெண் குரலை உரத்துச் சொல்லும் புதிய கவிஞைகளுடனான இலக்கியத் தொடர்பை ரேவதி வேண்டி நிற்கின்றார். தொடர்பு கொண்டு தமிழ் நாட்டுடன் இலக்கியப் பாலம் கட்ட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரி: kuttyrevathy@yahoo.co.in

நன்றி: தினக்குரல். 23 நொவம்பர், 2003

கொழும்பு பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் பெப்ரவரி கடைசியில் பெண்ணியம் தொடர்பான கல்வி நெறியொன்றினை (women's Studies) ஆரம்பிக்கின்றது. தொழில் பார்ப்பவர்களுக்கும் வசதியாக ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் இவர்களுடைய அலுவலகத்தில் விரிவுரைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. மூன்று மாத விரிவுரைகளின் பின்னர் பயிலுனர்கள் ஒரு ஆய்வுக்கட்டுரையையும் அடுத்த ஒரு மாதத்தில் சமர்ப்பிக்கக் கேட்கப்படுவார்கள். முழு கல்வி நெறிக்கும் ரூ 3,000 வசூலிக்கப்படுகின்றது. இதில் பங்குபற்ற விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 58, தர்மாராம வீதி, கொழும்பு – 6. தொலைபேசி: 2595296.

செயல்வாதத்தில் பெண்கள் இறங்குவதற்கு அவர்களுக்கு ஊடகத் திறன்கள் தேவையென்பதனால் அதற்குரிய பயிற்சிகளை ஏற்பாடு செய்வதில் விழுது நிறுவனம் ஆர்வம் கொண்டுள்ளது. இதற்கு முதல் படியாக சுவரொட்டிகள் எப்படி வரைவது என்னும் பயிற்சியினை பெப்ரவரி மாதம் நடத்தத் திட்டமிட்டுள்ளது. வரைதலில் விசேட திறமை கொண்டவர்களும், முக்கியமான பிரச்சனைகளை பொது மக்களுக்குத் தெரிவிப்பது எப்படி என்ற விடயத்தில் ஆர்வம் கொண்டவர்களும் இப்பயிற்சியில் கலந்து கொள்ளலாம். ஆர்வமுள்ளவர்கள் விழுது, 69, கோயில் வீதி, குருமன்காடு, வவுனியா என்கின்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

# அரங்கை அரசியல் களமாக்கி தெருவை அரசியல் அரங்காக்கிய ஹர்ஷிணிக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலி



அரங்கச் செயற்பாட்டுக்குழுவின் அங்கத்தவராக இருந்த ஹர்ஷினி அன்ரனிசாமி இந்த மாதம் 9ந் திகதி காலமானார். பெண்களுக்கு சாதாரணமாக இருக்கக்கூடிய தடைகளைத் தாண்டி வெளியில் வந்த ஹர்ஷினி, தன்னைப்போல் ஏனைய பெண்களும் தங்கள் தளைகளினின்றும் விடுபடவேண்டும் என்று அயராத பணியில் ஈடுபட்டவர். அவரின் மறைவு அவருடன் சமூகப் பணியில் இயங்கி வந்த அவரது தோழர்களுக்கு மாபெரும் இழப்பாகும்.

நாம் ஹர்ஷியை முதன்முதலாக 1997ம் ஆண்டில் சந்தித்தோம். திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் மன்றத்தினூடாக (YMHA) செயற்படுத்தப்படவிருந்த ஒரு இளைஞர் யுவதிகளின் பயிற்சித் திட்டத்தில் கலந்து கொள்ள அவரது ஊரான உவர்மலையிலிருந்து தெரிவானார். பயிற்சியின் போது இவர் செயல்திறனை அவதானித்தவர்கள் அவரை YMHA இன் அபிவிருத்திக்கான நிறைவேற்றுக்குழுவில் அங்கத்தவராகத் தேர்ந்தெடுத்தனர். 1998ம் ஆண்டு பெண்கள் அரங்கக் குழுவொன்றை உருவாக்கும் நோக்கத்துடன் நடத்தப்பட்ட பயிற்சியில் இவர் கலந்து கொள்ள நேரிட்டது. அதற்குப் பின்னர் ஹர்ஷி அரங்கையே தனது துறையாக வரித்துக் கொண்டார்.

அரங்கச் செயற்பாட்டுக்குழுவுடன் தன்னை இணைத்துக் கொண்ட ஹர்ஷி திருகோணமலையில் தனது நண்பிகள் சாந்தி சுஜாதா ஆகியோருடன் அரங்கப் பயிற்சிகள், கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் ஆகியவற்றை முன்னெடுத்தார். அது மட்டுமல்லாது, இவரது சேவை மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களுக்கும் தேவைப்பட்டதால் அங்கும் சென்று பணி செய்தார். இவரது இடையீட்டால் புத்துயிர் பெற்ற பெண்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் எத்தனையோ பேர். "எங்கடை ஊரில ஹர்ஷி எத்தனை பிள்ளைகளை வளர்த்திருக்கிறாள். இண்டைக்கு அவள் இங்க இல்லை" என்று இவருடைய மரண வீட்டில் கலந்து கொண்ட முதியவர் சொல்லி அழுதது காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

பெண்கள் சமூகப் பணி செய்ய வெளியே வருவதே கடினமான இந்த நாட்களில் அரங்கையே தனது பள்ளிக்கூடமாகத் தெரிந்து செயற்பட்டது அவரது துணிச்சலுக்கு ஒரு எடுத்துக் காட்டு. அரங்கை அரசியல் களமாக்கி தெருவை அரசியல் அரங்கமாக்கிய இவரது ஆளுமைக்கு 1999 மார்ச் சர்வதேச பெண்கள் தினமும், திருமலை பண்பாட்டு பவனியும், திருமலை பொங்கு தமிழும் சான்று.

கம்பீரம், மற்றவர் உணர்வுகளை மதித்தல், தனக்குச் சரி என்று நினைத்ததை வெளிப்படுத்தும் துணிவு, தன் துன்பங்களை வெளிக்காட்டாது செயற்படும் தன்மை, விசுவாசம், ஆகியன இவரது சிறப்பான பண்புகளாகும். ஹர்ஷியை முன்மாதிரியாகக் கொண்டு நாமும் காரியம் ஆற்றத் துணிவோமாக. ஹர்ஷினியின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சதாசிவம் பாஸ்கரன் விழுது, வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்தில் பெண்கள் மீதான வன்முறை

## கதைத் தொடர்

எமது பாரம்பரிய இலக்கியங்களிலும் சமய இலக்கியங்களிலும் ஏராளமான சம்பவங்கள் பெண்கள் மீது எத்தகைய வன்முறைகள் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கோடு காட்டுகின்றன. நாங்கள் எல்லோரும் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எங்கள் சிறு வயது முதல் வாசித்து அதனைப் பற்றி சர்வ சாதாரணமாக அளவளாவி வருவதனால் தான் அக்குற்றத்தினை ஒரு பாரதூரமான பிரச்சனையாக எடுக்காமல் அதனை அங்கீகரிப்பவர்களாக வளர்கின்றோம். பெரும்பாலான கதைகளில் அந்த நடவடிக்கைகள் கண்டிக்கப்படுவதே கிடையாது. மேலும், அவை அநேகமாக கதையின் கதாநாயகர்களினாலோ அல்லது ஆண்டவனால் அருள் செய்யப்பட்ட ஒருவரினாலோ மேற்கொள்ளப்படுவதால் செய்யப்படுவது தவறாகாது என்ற ரீதியில் தரப்படுகின்றன. பெண்கள் மீதான வன்முறையை சமூக மயப்படுத்த உதவும் இவ்வகையான கதைகளை இங்கு தலைவி வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

இன்று வேதாகமத்தில் தரப்படும் தமாரின் கதையை இங்கு கூறுகின்றோம். தமார் சிறப்பு வாய்ந்த மன்னன் தாவீதின் மகள். (தாவீதின் வழித்தோன்றல்தான் இயேசுநாதர் ஆவார்.) தாவீதின் மூத்த மனைவியின் மகனான அம்னன் தமாரின் மீது மோகம் கொண்டான். தமார் தன்னுடைய தங்கை என்ற உணர்வுகூட அவன் மோகத்தைத் தணிக்கவில்லை. அவளை அடைவதற்குத் திட்டம் போட்டு நோயில் வீழ்ந்தவன்போல பாசாங்கு செய்தான். அம்னன் தாவீதின் மிகப் பிரியமான மகனாவான். ஆகையினாலே தாவீது தன் மகள் தமாரை அம்னனுக்கு சேவை செய்யும்படி பணித்தான். தந்தை சொல்லைத் தட்ட மாட்டாதவளாய் தமார் அம்னனுக்குப் பணிசெய்தாள். அம்னனோ இந்த வாய்ப்பை உபயோகித்து தமார் மீது பாலியல் பலாத்காரம் புரிந்தான். அவளை இவ்வாறு சுகித்த பின்போ அவள் மீது அம்னனுக்கு தாங்கவொண்ணாத வெறுப்பு தோன்றியது. தான் புரிந்த இழிச் செயலுக்கான ஆத்திரத்தை அப்பேதைப் பெண் மீதே திருப்பினான். தனக்கு நேர்ந்த அவமானத்தினையும் தனக்கு இனிமேல் திருமணம் நிகழ முடியாதவாறு நேர்ந்த விதியையும் நினைத்து கதறிய தமாரைத் துரத்தி விட்டான். அம்னன் தனக்கு மிகவும் பிரியமான மூத்த மகனாக இருந்தபடியினால் மன்னன் தாவீது அவனைத் தண்டிக்க மறுத்து விட்டான்.

எதிர்காலம் சிதைந்து நிலைகுலைந்து நின்ற தமாருக்கு ஆதரவு கொடுத்த அவள் சொந்த அண்ணன் அப்சலம் இரண்டு வருடங்களுக்குப் பிறகு அம்னனைக் கொன்று பழி தீர்த்தான். அம்னனின் இறப்பிற்காக மூன்று வருடங்களுக்கு நாளும் பொழுதும் சோகம் கொண்டாடினான் மன்னன் தாவீது என்று ஏடுகள் கூறுகின்றன. அப்சலம், மன்னனின் கோபத்துக்குப் பயந்து நாட்டை விட்டோடினான். ஆனால் கடைசியில் தாவீது தனது மகனை மன்னித்து அவனுக்கு ஆட்சிப்பொறுப்பையும் கொடுத்தானாம். தமார் கடைசிவரை ஒரு தனிமைப்படுத்தப்பட்ட சோகப் பெண்ணாக தனது அண்ணன் வீட்டில் காலம் கழித்தாள்.

---

## திருகோணமலை புலவர் த. கனகசுந்தரம் பிள்ளையும், மாதர் மதிமாலிகையும்

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகப்பட்டினமான திருகோணமலையில் வேளாண் குடியில் 24ந் ஆவணி 1863ந் அன்று திரு தம்பிமுத்துப்பிள்ளைக்கும் அவர் மனைவிக்கும் மூத்த மகனாக திரு தி.த. கனகசுந்தரம்பிள்ளை பிறந்தார். இவருடன் கூடப்பிறந்தவர் "மோகனாங்கி" என்ற நாவலைத்தந்த தி.த சரவணமுத்துப்பிள்ளையும் தையல்நாயகி சுப்ரமணியமுமாவார்..

பெண்ணியம் பற்றியும் பெண்கள் விடுதலை பற்றியும் இன்று பெரிதாகப் பேசுபவர்கள் திருகோணமலையில் பிறந்த தையல்நாயகி சுப்ரமணியம் அவர்களின் சேவையை இலகுவில் மறந்து விடமுடியாது. அங்கு முதன்முதலாக மாதர் சங்கத்தை அமைத்ததுடன் மட்டுமல்லாது 1922ம் ஆண்டளவில் "மாதர் மதிமாலிகை" என்ற சஞ்சிகையையும் முதன்முதலாக பெண்களுக்கென வெளியிட்டு வைத்த பெருமைக்குரியவருமாவார்.

இந்த மாதர் மதிமாலிகையில் பல கட்டுரைகளையும், பாடல்களையும் திரு. கனகசுந்தரம் எழுதியுள்ளார். இவை பெரும்பாலும் பெண்களின் உரிமைகள் பற்றியதாகவே அமைந்துள்ளன எனலாம். பெண்கள் இசைக்கல்வி பெறவேண்டும் என்பதற்காக "தட்ஷணகானசபா"என்ற இசைக்கல்வி நிலையத்தையும் உருவாக்கி அதன்மூலம் பல இளம் யுவதிகள் ஆசிரியர்களாக வருவதற்கு வழிவகுத்தவரும் இந்த தி.த.கனகசுந்தரம்பிள்ளை அவர்களின் வழித்தோன்றல்களே.

என் ஆர். மகேந்திரன். திருகோணமலை.

## அன்புள்ள அன்னையருக்கு.

உங்கள் பெண் பிள்ளைகள் எழுதும் அன்பு மடல் பத்து மாதம் எம்மை சுமந்து பலன் ஏதும் கருதாது இந்த பூமியில் தவழச்செய்யும் ஈடு இணையில்லா தாய்க்குலங்களே! உங்களிடம் ஒரு கேள்வி?

எந்தக் குழந்தையையும் மடியில் சுமக்கும் போதும் பிரசவ வேதனையை ஒரே மாதிரியாக அனுபவிக்கும் நீங்கள் ஏன் அக்குழந்தைகளை வளர்க்கும் போது ஆண்பிள்ளையை ஒருவிதமாகவும் பெண் பிள்ளைகளை ஒரு விதத்திலும் வளர்க்கின்றீர்கள். நீ பெண் பிள்ளை என்று சொல்லிச் சொல்லி ஆயிரம் வரம்புகள் இட்டு சிறைக்கூடம் அமைத்து வளர்க்கின்றீர்கள். அவ்வாறு அடைபட்டு அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு வளரும் நாம் இன்றைய உலக மாற்றத்துக்கு ஏற்ப எம்மால் ஈடு கொடுக்க முடியாமல் தவிக்கின்றோம். இதனால் எங்களுடைய ஆற்றல்கள் குறிக்கோள்கள் அபிலாசைகளை அடைய முடியாது. திணறுகின்றோம் ஏன் இந்த அவலநிலை இதே தவிப்பை நீங்களும் அனுபவித்து இருப்பீர்கள். இருப்பினும் உங்களால் எதிர்க்க முடியாது போய் இருக்கலாம். ஆனால் இனியும் மௌனமாக இருப்பதில் அர்த்தம் இல்லை. அன்றைய மௌனத்தின் பிரதிபலிப்புத்தான் நாங்கள் இன்று அனுபவிக்கின்றது. சமூகம் பெண்ணுக்கு இட்டகுறுகிய வட்டத்திற்குள் இருந்து கொண்டு இன்னமும் இதுதான் விதி இப்படியே இருந்து விடுகிறோம் என்றால் நீங்கள் எங்களுக்கு இழைக்கும் மாபெரும் துரோகம். எங்கள் நிலையைப்பற்றி சற்று சிந்தித்துப் பாருங்கள் அன்னையரே உங்கள் முடிவில் தான் எங்கள் ஆரம்பம்.

இப்படிக்கு

"விடியலை நோக்கிய மகள்மார்"

தி.காயத்திரி. திருமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது சஞ்சிகையல்ல வாசகர்களே!

சென்ற மாதம் ஒரு வாசகர் ஒரு கவிதையை எமக்கு எழுதி அனுப்பி அதை எப்படியாகிலும் பிரசுரியுங்கள், அதற்குரிய தரம் இல்லாவிட்டால் சொல்லுங்கள் திருத்தி அனுப்புகின்றேன் என்று வேண்டியிருக்கின்றார். தலைவியை வாசிக்கும் சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் நாம் திரும்பத் திரும்பச் சொல்லும் விஷயம் இதுதான். தலைவி ஒரு சஞ்சிகை அல்ல! உங்கள் விழிப்புணர்வுக் கவிதைகளைப் பிரசுரிக்கவோ அல்லது சீதனப் பேயை ஒழிப்போம், மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பெண்கள் செல்லாமல் தடுப்போம், பெண் சிசுக் கொலையைத் தடுப்போம் என்று நீங்கள் அறைகூவல் விடுத்தற்கோ பொருத்தமான களம் தலைவி அல்ல.

சீதனப் பேயை ஒழிக்க வேண்டுமா, அதற்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை பிற சகோதரிகளுக்கும் சகோதரர்களுக்கும் தெரிவிக்கவே தலைவி களம் அமைத்துக் கொடுத்திருக்கிறாள். பெண்கள் வீட்டுப் பணிப்பெண்களாக வெளிநாட்டுக்கு செல்லக் கூடாதா, அதற்கு நீங்கள் என்ன வழி பண்ணுகின்றீர்கள் என்பதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளத்தான் தலைவி ஆவலாக இருக்கின்றாள். தலைவி ஒரு செய்தி மடலாகும். திரும்பத் திரும்ப கவிதைகளும் நாம் மேற்குறிப்பிட்டது போன்ற கட்டுரைகளும் வருவதனால்தான் நாங்கள் வேறு வழியில்லாமல் சிலவற்றைப் பிரசுரிக்கின்றோம். அதைப் பார்த்துவிட்டு ஏனையோர் தமது ஆக்கங்களையும் அனுப்பலாம் என்று நினைத்து அனுப்பி எங்களை மேலும் சங்கடத்தில் ஆழ்த்துகின்றனர்.

தலைவி வெளியிடுபவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பத்திலும்கூட பலர், "நான் ஆக்கம் எழுதி அனுப்பி வைத்துள்ளேன். கட்டாயம் அதைப் பிரசுரிக்கவும்" என்கின்ற தொனியில் வேண்டிக் கொள்கின்றனர். சகோதரிகளே, தலைவி இதழில் பிரசுரிக்கப்படும் கட்டுரைகளெல்லாம் புதிய தகவல்களைத் தந்து புதிய சித்தாந்தங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியைச் செய்கின்றன. நாம் ஒரு நோக்கில் இதுவரை பார்த்து வந்த, சிந்திக்காதிருந்த விடயங்களை புது நோக்கில் பார்க்க வைக்கவும் சிந்திக்க வைக்கவும் உதவுகின்றது. சீதனம் போன்ற பிரச்சனைகள் உங்களுக்குத் தெரிந்த அதிகம் நம்மத்தியில் விவாதிக்கப்பட்ட பிரச்சனைகளல்லவா? உதாரணமாக சீதனம் வாங்காதே என்று நாம் சொல்ல வேண்டுமா? எல்லோருக்கும் அது தெரியுமே. இது தெரியாதவர்கள் யார் இருக்கின்றார்கள் சொல்லுங்கள் பார்ப்போம். அப்படித் தெரிந்தும் சீதனம் வாங்குகிறவர்கள் இங்கு தலைவியில் நாம் எழுதுவதனால் திருந்தப் போகிறார்களா? சிந்தியுங்கள் சகோதரிகளே. வீண் விரயமாகும் நடவடிக்கைகளில் இறங்காதீர்கள்.

## பெண்கள் மீதான வன்முறையைப் பற்றிய உலக வலம்

### லத்தீன் அமெரிக்கா

கொஸ்டா ரிகாவில் கிட்டத்தட்ட 50 வீதமான பெண்கள் தங்களது வாழ்வில் ஏதோவொரு கட்டத்திலேனும் வன்முறையை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது என்று கண்டுள்ளனர். இளந் தாய்மார்களின் நலன்களுக்கு வேலை செய்யும் நிறுவனமொன்று, அங்கு, 15 வயதுக்கு உட்பட்ட கருத்தரித்த பெண்கள் மத்தியில் 95 வீதமானோர் குடும்பங்களுக்குள் நிகழும் தகாத உறவுகளினாலேயே கருத்தரித்திருப்பதாகக் கணித்திருக்கின்றது.

பேரு நாட்டில் செய்யப்பட்ட ஆய்வு விபரங்களின்படி பேட்டி காணப்பட்ட பெண்களில் அரைவாசிப்பேர் சிறு பிராயத்தில் தமது பாலுறுப்புக்களை பிறர் அளைந்த அனுபவத்தினைக் கூறியிருக்கின்றனர். இதில் பெரும்பான்மையோர் இச்சம்பவங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் நிகழ்ந்ததாகக் கூறியிருக்கின்றனர். மேலும், பத்திலொரு பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாக இவ்வறிக்கை கூறுகின்றது.

சிலி நாட்டில் 60 வீதமான பெண்கள் தமது கணவன்மார்கள் காதலர்கள் கைகளினால் ஏதோவொரு முறையில் வன்முறையை அனுபவிக்கின்றனராம். இவர்களில் 10 வீதமானோர் உடலுக்கு ஊறு விளைவிக்கப்படுகின்றது. எகுவாடோரிலும் அங்குள்ள வறிய பிரதேசங்களில் 60 வீதமான பெண்கள் கணவர்கள் கையால் அடிவாங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ஜென்டீனாவில் 37 வீதமான பெண்கள் நீண்ட கால அடிப்படையில் தங்கள் திருமண வாழ்வில் அடி உதைகளுடன் வாழ்கின்றனர் என்று காணப்பட்டுள்ளது.

கொலம்பியாவில் 20 வீதமான பெண்கள் உடல் ரீதியான துன்புறுத்தல்களை எதிர்கொள்கின்றனர். இவர்களில் 10 வீதமானோர் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியிருக்கும் அதே வேளை 34 வீதமானோர் உள ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் காணப்படுகின்றனர்.

மெக்ஸிகோவின் பெண் தொழிலாளிகளில் 95 வீதமானோர் தமது வேலைத்தலங்களில் பாலியல் தொந்தரவுகளுக்கு உள்ளாகி வருகின்றனர். இப்படித் தெரிவிப்பது அங்குள்ள பெண்கள் தொழிற்சங்கங்களின் சம்மேளனமாகும். இங்கு 300 சாதாரணப் பெண்களைப் பேட்டி கண்டவிடத்தில் அவர்களில் 33 வீதமானோர் வன்முறைச் சம்பவங்களுடனான உறவுகளைத்தான் தமது ஆண் துணைவர்களுடன் வைத்திருந்ததாகக் காணப்படுகின்றது. இதில் 6 வீதமானோர் திருமண உறவிலேயே பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

பொலிவியாவில் பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்களில் 95 வீதமானவற்றில் குற்றவாளி தண்டிக்கப்படுவதில்லை என்று தெரிய வருகின்றது.

அடுத்த இதழ்களிலும் உலக வலம் தொடரும்...........

## பெண் சிசு கருக்கலைப்பு ஏன்?

பெண்கள் தொடர்பாக "மார்க்ஸிம் கோர்கி" உலகிலே சகலவற்றிற்கும் உயர்வினை அளிப்பது சூரிய ஒளியும் அம்மாவும் ஆகும் என்ற கருத்தை பெண்களின் உயர்வு குறித்து கூறினார். வாழ்வுக்கு உயிரோட்டத்தையும் உலகிற்கு உறுதியினையும் தருவதில் ஆண்களுடன் சரிசம நிலையில் காணப்படுவது பெண்களாகும். இப்படியான உயர்கருத்துக்கள் இருக்கும் போது பெண் சமுதாயமே பெண் பிள்ளை பிறந்தால் "பெண்ணா?" என்று இழப்பு இழையோடிய ஆதங்கத்தை ஒலிக்கிறது. ஒரு பெண்ணை பெற்று வளர்த்து படிக்கவைத்து சொத்துக்கள் பல கொடுத்தும் திருமணம் செய்து வைத்தும் எத்தனையோ பெண்கள் கண்ணீரோடு வாழ்வதுதான் இதற்குக் காரணம். இதனால் தான் கருவில் இருப்பது பெண் சிசு என்பதனை கண்டுபிடித்து கருவிலே சிதைத்து விடுகிறார்கள். "ஸ்கேனர்" இது ஓர் ஆக்கபூர்வமான கருவி. கருவில் இருக்கும் குழந்தை பூரண நலத்துடன் வளர்கிறதா எனத் தெரிந்து கொண்டு ஏதேனும் குறையிருந்தால் வைத்தியத்தினால் நிவர்த்தி செய்து ஆரோக்கியமாக வளர்வதற்கு வழிவகுக்கும் அற்புத கருவி. வளரும் சிசு ஆணா பெண்ணா என்பதனை கண்டு பிடித்து பெண்ணாக இருந்தால் அழித்துவிட உதவிபுரியும் கொலைக் கருவியாக இதனை மாற்றிவிட்டார்கள் பெண்கள்.

நூறு கோடியை தாண்டி விட்ட சனத்தொகையை கட்டுப்படுத்த கருத்தடையை இந்தியா செய்கிறது. அதிலும் விசேடமாக பெண் சிசுக்களை சிதைப்பதை இந்தியா கண்டும் காணாதது போல் இருக்கிறது. இதே போல் சீனாவும் 125 கோடியை தாண்டி விட்டது. இதனால் ஆண்சிசுக்களைவிட பெண்சிசுக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த "ஸ்கேனர்" மூலம் நான்கு ஆண்சிசுக்களுக்கு ஒரு பெண்சிசு என்ற வீதத்தில் பெண் வீதத்தை கட்டுப்படுத்தி வருகின்றன. இலங்கையில் இத்தகைய விபரீதங்கள் இல்லாது போனாலும் சமீபகாலங்களில் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வரும் கருக்கலைப்புக்களுக்குள் இத்தன்மையையும் புகுத்தும் நிலைக்கு இலங்கையும் வரலாம்.

ந. அஞ்சலிதேவி. முன்னம்போடி வெட்டை., தோப்பூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் இயற்கையிலேயே சமாதான விரும்பிகள்!

மனிதர்களைப் பற்றிய விஞ்ஞானத்துறையின் பேராசிரியர் ரிச்சர்ட் ரங்கம் (Richard Wrangham) என்பவர் மனிதர்கள் தம்முள் யுத்தம் புரிவதன் அடிப்படையை ஆராய்ந்து சில திடுக்கிடும் தவல்களைக் கண்டு பிடித்துள்ளார். பேராசிரியர் பல தசாப்பத காலங்களாக சிம்பன்ஸி இனக் குரங்குகளை ஆய்வு செய்து வந்துள்ளார். சிம்பன்ஸி குரங்கு இனம் மானிட இனத்திற்கு நெருங்கிய உடலமைப்புக் கொண்டதென்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அதன் நிற மூர்த்தங்களில் (DNA) 98.5 வீதமானது மனிதர்களைப் போன்றே அமைந்திருக்கின்றது. இதனால்தான் பேராசிரியர் ரங்கமும் சிம்பன்ஸிக்களை ஆய்வு செய்தார்.

இவருடைய ஆய்வில் இக்குரங்குகள் உணவு, தங்கள் பிரதேசம், பெண் துணைகள், அதிகாரம் நிறைந்த அந்தஸ்து ஆகியவற்றுக்காக பிற குழுவைச் சேர்ந்த ஆண் குரங்குகளுடன் போரிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. அவை இரைச்சலோடு தமக்குள் தொடர்பாடுவதை வழக்கமாகக் கொண்டிருப்பினும், பிற ஆண்களைக் கொல்லக் கிளம்பும் குரங்குகள் சத்தம் போடாது பதுங்கி ஒற்றைக் கட்டில் ஒன்றன் பின் ஒன்றாக சென்று நமது நவீன இராணுவங்களைப் போன்ற நடத்தையைக் காட்டின. ஓரிடத்தில், ஒரு குழுவாக வாழ்ந்த சிம்பன்ஸி குரங்குகள் இரண்டாகப் பிளவுபட, ஒரு குழுவின் ஆண்கள் மற்றைய குழுவின் ஆண்களெல்லாவற்றையும் சில பெண்களையும் கொன்றன. எஞ்சியிருந்த பெண் குரங்குகளைத் தமது குழுவில் சேரும்படியும் வற்புறுத்தின. ஆனால், இம்மாதிரியான வன்மையான நடத்தை அவற்றின் ஆண்களுக்கு மட்டுமே உரிய நடத்தையாகக் காணப்பட்டது.

இதனால், இந்நடத்தையை Demonic male Hypothesis என்று பேராசிரியர் பெயரிட்டார். அதாவது, மனிதர்களினதும் சிம்பன்ஸி களினதும் ஆண் இனங்கள் பேய்க்குணத்தைக் கொண்டன என்னும் கோட்பாடு இதுவாகும். இதை இன்னும் நிரூபிக்க ஒரு பரிசோதனையையும் நடத்தினாராம். அரசியல் தலைவர்கள் பிரச்சனைகள் முற்றி வரும்போது எவ்வாறு நடக்கின்றனர் என்பதை ஆராய்வதே இப்பரிசோதனையின் நோக்கமாகும். அதற்கு, தமதருகே இருக்கும் ஒரு தீவினைச் சொந்தம் கொண்டாடி பல வருடங்களாகப் போட்டி போட்டுக்கொண்டிருக்கும் இரு அயல் நாடுகளின் கதையைக் களமாக எடுத்துக் கொண்டார். ஆண்களும் பெண்களும் என இருவர் இருவராக, முன்னெப்போதும் சந்தித்திராத மனிதர்களை அந்த இரு நாடுகளினதும் ஜனாதிபதிகளாகத் தம்மை உருவகித்து நடிக்க விட்டார். இந்தச் சூழ்நிலைக்குள், தரப்பட்ட அந்தத் தீவினில் எண்ணெய் வளம் கண்டு பிடிக்கப்படுவதாகத் தரப்பட்டது. இதற்குப் பின் இரு அரசியல் தலைவர்களினதும் நடத்தைகள் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டது.

இந்த விளையாட்டை ஆண்கள் விளையாடியபொழுது இருவரும் தாமே எப்பொழுதும் வெல்ல வேண்டுமென விரும்பியது காணப்பட்டது. இதற்காக போர்ப்படைகளைக் குவித்து தமது நாடுகளை பல வருடங்களூடாக அழுத்தும் கடன் மற்றும் பொருளாதாரச் சுமைகளைச் சுமக்கத் தள்ளினர். ஆண்களும் பெண்களும் விளையாடியபோது, 75 வீதமான சந்தர்ப்பங்களில் ஆண்கள்தாம் பெண்களைப் போரைக் காட்டி அச்சுறுத்தி மிரட்டக் காணப்பட்டனர். இந்த சந்தர்ப்பங்களில் போர் ஆரம்பித்தபோது அனேகமாக பெண்கள் அப்போரில் தோல்வி கண்டனராம். ஆனால், இருவர் இருவராக பெண்கள் விளையாடியபொழுது அவர்கள் பேச்சுவார்த்தைகளிலேயே அதிகம் ஈடுபடக் காணப்பட்டனர். அது மட்டுமல்ல, யுத்தத்திற்குச் செலவு பண்ணுவதைத் தவிர்த்து, தீவிலுள்ள எண்ணெய் வளத்தை ஆளுக்குப் பாதியாகப் பிரித்து, தங்களுடைய அனுபவங்களை வைன் குடித்து மகிழ்ந்து பகிர்ந்து கொள்ளுவோம் என்றுகூட ஒப்பந்தம் செய்து கொண்டார்களாம்.

நீண்ட காலத்தினூடாக, ஏராளமான ஆண்களையும் பெண்களையும் வைத்து நடத்தப்பட்ட இப்பரிசோதனை ஆண்களினதும் பெண்களினதும் நடத்தைகளைத் துல்லியமாகக் காட்டும் ஒரு முக்கிய விஞ்ஞானக் கண்டு பிடிப்பாகக் கருதுகின்றனர். இதற்கு சமகாலப் புள்ளி விபரங்களும் சாட்சி சொல்லுகின்றன. பிரித்தானியாவில் செய்யப்பட்ட பெரிய ஆய்வொன்றில், அங்கு ஆண்கள் பெண்களிலும் விட 24 தடவைகள் கூட கொலை செய்யும் தன்மை உடையவர்களாகவும், 263 தடவைகள் கூட பாலியல் வன்முறைகள் பிரயோகிக்கும் தன்மை உடையவர்களாகவும் இருக்கின்றனர் என்று காணப்பட்டிருக்கின்றது.

இதற்கு பேராசிரியர் ரங்கம் கொடுக்கும் தீர்வு? "வன்முறைக்குத் தள்ளும் எங்கள் நிறமூர்த்தங்களின் பாரம்பரியங்களை நாம் புறந் தள்ள முடியாது. ஆனால் பெண்களை உலகத்தின் முக்கியமான அரசியல் முடிவுகளை எடுக்கும் பதவிகளில் அமர்த்துவதனால் இந்தப் பூமியை அழிவுக்கு இட்டுச் செல்லும் எத்தனையோ யுத்தங்களை நாம் தவிர்த்துக் கொள்ளலாம். என்னுடைய கனவு என்ன தெரியுமா? ஒவ்வொரு நாட்டிலும் ஆண்கள் அடங்கியதாகவும் பெண்கள் அடங்கியதாகவும் இரு பாராளுமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும். இந்த இரு பாராளுமன்றங்களும் இணங்கினால்தான் யுத்தத்திற்குச் செல்வதற்கான தீர்மானங்களை அந்நாடு மேற்கொள்ளலாம் என்கின்ற சட்டத்தையும் செயற்படுத்தவேண்டும். இதுவொன்றுதான் குரங்குகளின் நடத்தையிலிருந்தும் மனிதன் ஏற்படுத்தும் பேரழிவிலிருந்தும் எம்மை இட்டுச் செல்லும் ஒரே வழியாகும்."

பேராசிரியரின் தீர்வுக்கு ஆண்கள் ஒத்துக்கொள்வார்களா? அவர்கள்தான் அதிகாரத்தை அடைவதற்காக யுத்தத்திற்குச் செல்லும் இனமாயிற்றே?

நன்றி: ஐலண்ட். ஜனவரி12, 2004

## மார்ச் 8 க்கான ஊடக நிகழ்ச்சிகளில் நீங்களும் பங்கு கொள்ளலாம்

ஊடறு ஊடகப் பெண்கள் அமைப்பு வருகின்ற சர்வதேசப் பெண்கள் தினத்தையொட்டி பலவிதமான வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிக்க முயற்சிக்கின்றனர். இதைவிட, பத்திரிகைகளிலும் என்ன விதமாக இந்த வருட நிகழ்வை அனுஷ்டிக்கலாம் என்றும் ஆராய்ந்து வருகின்றனர். இந்த வருடம் எடுக்கப்படவேண்டிய முக்கிய பிரச்சனை, அதை எவ்வாறான முறைகளில் வெளிப்படுத்தலாம் என்பதில் நீங்களும் ஆலோசனை வழங்கினால் அவர்களுக்குப் பயனளிக்கும். நீங்கள் கருத்துக்களைத் தருவதில் மட்டுமன்றி பங்களிப்பதிலும் முன்வந்தீர்களானால் எங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

தொலைக்காட்சியில் ஒளிபரப்பக்கூடிய நாடகங்கள், விவரண நிகழ்ச்சிகள் ஆகியவற்றை எங்களுக்கு எழுதியனுப்புங்கள். நீங்கள் எழுதியனுப்பும் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்வுகள் 5-20 நிமிடத்துக்கு மேற்படாதவாறு இருக்க வேண்டும் என்று கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். ஆங்காங்கே இலைமறை காயாக இருந்து வரும் அரங்கக் குழுவினர்களும் இசைக்குழுவினர்களும் எங்களுடன் தொடர்பு கொண்டீர்களானால் உங்களுக்கும் இதில் பங்கு கொள்ள வாய்ப்புக்களைத் தர முயற்சிப்போம்.


இதேபோல் வானொலி நாடகங்கள், நிகழ்ச்சிகளுக்கும் உபயோகிக்கக்கூடிய யுக்திகளை எம்முடன் பகிர்ந்து கொள்ளலாம். பத்திரிகைகளில் கட்டுரைகள், கார்ட்டூன் சித்திரங்கள் போன்றவற்றை பிரசுரிக்க விரும்புகின்றீர்களாயின் அதையும் எழுதி அனுப்புங்கள். சகோதரிகளின் புத்தாக்க முயற்சிகளுக்கு எங்கள் முன் வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் கடிதங்கள். . . .

## " நான் அனுப்புவது கடிதம் அல்ல... என் உள்ளம்"





அன்புடன் தலைவிக்கு,

தமிழ் மக்கள் மத்தியில் சீதனக் கொடுமை பற்றி அதிகம் பேசப்படுகின்றது. நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தபோது அவர் ஒரு பெண்ணின் எதிர்காலப் பாதுகாப்பை கருத்தில் கொண்டே பெண்களுக்கான இந்தச் சொத்துரிமை தேசவழமைச் சட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது, ஆகவே இது பிரச்சனை அல்ல என்று வாதிட்டார்.

பெண்களின் உரிமை மற்றும் பாதுகாப்புப் பற்றிய தொலைநோக்குடன் செயற்பட்ட மக்கள் பாரம்பரியம் இது, குறைகள் இருந்தால் திருத்திக் கொள்ளலாமே தவிர ஒட்டுமொத்தமாக ஒழிக்கக் கூடாது என்று சொன்னார். உங்கள் அபிப்பிராயம் என்ன?

எஸ் பாக்கியா.

ஆம், மிக எளிமையாகச் சொன்னால் விடயம் இதுதான். பெண்களுக்கு எங்கள் சட்டத்தில் சொத்துரிமை வழங்கப்பட்டுள்ளது. அதிக சொத்து உள்ள பெண்களுக்கு எங்கள் மாப்பிள்ளைகள் ஆசைப்படுகின்றார்கள். இதுதான் நாம் இன்று பேசும் சீதனப் பிரச்சனையாகும். அதிகப் பணமும் சொத்தும் இருக்கும் வீட்டில்தான் சாதாரண மனிதர்கள் சம்பந்தம் செய்து கொள்ள விரும்புவார்கள். அதில் வியப்பு ஏது? நாங்களெல்லோரும் அப்படித்தான். வறுமை இல்லாமல் வசதியாக இருக்க வேண்டும் என்றே ஆசைப்படுகின்றோம் இல்லையா? அப்படியானால் இங்கு எங்கு பிரச்சனை? சமூகம் கொண்டிருக்கும் சில விழுமியங்களினால்தான் இங்கு பிரச்சனைகள் தோன்றுகின்றன. அவை என்னவென்று பார்ப்போம்.

முதலாவதாக, ஒரு பெண் திருமணம் செய்துகொண்டால் தான் அவளுக்கு வாழ்வு உண்டு என்று சொல்லுகின்றது. மணம் முடிக்காமல் இருக்கும் முதிர் கன்னியரை மகிழ்ச்சியாக வாழ விடமாட்டேன் என்கின்றது. அவர்களை ஒருவிதமாக இழிவாகவும் நோக்குகின்றது. இதனால் எப்பாடு பட்டாலும் தங்கள் மகளைத் திருமணம் செய்து கொடுத்துவிட வேண்டும் எனப் பெற்றார் துடிக்கின்றனர். இத்துடிப்பில் மாப்பிள்ளை வீட்டாருக்கு கிடைத்ததுதான் சீதன வேட்டை. பெண்களுக்கு திருமணம் அவர்கள் வாழ்வில் ஒரு அத்தியாயமே. இந்த மனிதப் பிறவியின் அதிமுக்கிய பணி அதுவல்ல. நாம் செய்யும் தொழில், எமது கலைத் திறன்கள், மக்களுக்கு ஆற்றும் சேவை, பிறரிடம் நாம் காட்டும் அன்பு இவ்வாறு பல வழிகளாலும் நாம் இந்த உலகத்துக்கு எம்மை வெளிக்காட்டி வருகின்றோமே, அதுதான் எமக்கு முழு மனநிறைவு தரும் வாழ்க்கையாகும். இப்படித்தான் வாழவேண்டும் என்று சகல மதங்களும் வேதங்களும் கூடக் கூறுகின்றன. ஆனால் எங்கள் பெண்களுக்கு இந்த மனநிறைவு தரும் வாழ்க்கை தரப்படுகின்றதா என்றால் இல்லையென்று தான் கூற வேண்டும். மதங்கள் காட்டிய வழியைக்கூட பெண்கள் பின்பற்ற விடாது ஆணுரிமைவாதம் தடை செய்திருக்கின்றது. பெண்களுக்கு விருப்பமான தொழில் செய்ய முடியாது, விரும்பிய இடங்களுக்குச் சுதந்திரமாகப் போக முடியாது, விரும்பிய மக்களுடன் நெருங்கிப் பழக முடியாது. கிணற்றுத் தவளைகளாக ஒரே வீட்டில் ஒரே வேலை செய்யும் இடத்தில் அடைக்கப்பட்டு வாழப்பழகிக் கொள்கின்றார்கள். வெளியில் என்ன நடக்கின்றதென்ற அறிவும் குறைவு. எங்கு போவதென்றாலும் ஆண்துணை அவர்களுக்கு வேண்டும். மானிட இனத்தின் கண்ணுக்கு அது பரவாயில்லை, அவர்கள் ஒழுங்காக ஒரு "களங்கமும்" இல்லாமல் இருக்கவேண்டும் என்பதுதான் அதற்கு முக்கியம். ஏனெனில்.... ஒரு ஆணுக்கு அவள் "வாழ்க்கைப்படுவதனாலே". இதுதான் பிரச்சனை. சீதனம் கொடுப்பதல்ல.

பெண்கள் விரும்பினால் திருமணம் புரியாமல் இருக்கலாம் என்கின்ற விழுமியம் நம்மத்தியில் வேரூன்றினால் சீதனப் பிரச்சனை தானாகவே ஒழிந்துவிடும். மேலை நாடுகளில் அவ்வாறுதான் பெண்கள் வாழத் தொடங்கிவிட்டனர். ஸ்கந்தினேவிய நாடுகளில் ஏறக்குறைய 35 வீதமான பெண்கள் தாம் மணம் முடிப்பதில்லை என தீர்மானம் எடுத்திருக்கின்றனராம். ஒரு ஆணோடு நாளும் பொழுதும் வாழ்ந்து அவன் கொண்டு வரும் சிக்கல்களில் மாட்டுப்படுவதைவிட தனியே இருப்பது மேல் என்று அவர்கள் நினைக்கின்றார்கள். அவர்கள் தங்கள் தொழில்களுடனும் நண்பர்களுடனும் பொழுதைப் போக்குகின்றார்கள். ஏன், குழந்தைகளும் பெற்று வளர்க்கின்றனர். அங்குள்ள நாடுகளில், தனியாக வாழ்ந்து பிள்ளைகள் பெற்று வளர்த்தால் கூடிய இலாபம் பெறலாம் என்று மக்கள் நினைக்கும் அளவுக்கு தனியாக வாழும் தாய்மார்களுக்கென அவர்களது அரசாங்கம் பல விசேட சலுகைகளையும் செய்து தந்திருக்கின்றது. இது எப்படியிருக்கின்றது சகோதரிகளே.

அடுத்ததாக, ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு அந்தஸ்து கொடுத்திருக்கின்றோம். உதாரணமாக, விவசாயி என்றால் கீழ், டொக்டர் என்றால் மேல், இத்தியாதி இத்தியாதி. எல்லாத் தொழில்களும் எமது சமூகத்துக்கு அவசியமான தொழில்கள் தாம். விவசாயி பயிரிடாது போனால் நாம் எப்படி உண்டு உயிர் வாழ்வது? இதனால் நம்மத்தியில் படித்த இளைஞர்கள் தாங்கள் எப்படியாவது வெள்ளைக் கொலர் உத்தியோகம் பார்க்க வேண்டும் என்று ஆலாய்ப்பறந்து டவுனுக்குப் போய் விடுகின்றார்கள். கிராமம் திரும்ப படித்தவர்கள் இன்றிய பாலைவனமாகக் காட்சியளிக்கின்றது. திருமணச் சந்தையிலும் "பெரிய" தொழில் பார்ப்பவர்களுக்குத் தான், டவுனில் இருப்பவர்களுக்குத் தான், மவுசு. இவர்களுடன் சம்பந்தம் செய்துகொண்டால்தான் சமூகம் மதிப்பளிக்கும் என்றால் அப்படி வாழத்தானே எல்லோரும் ஆசைப்படுவார்கள்? தொழில் ரீதியாக மாப்பிள்ளைகள் தங்களுக்கு விலையை ஏற்ற ஏற்ற சீதன அளவுகளையும் அச்சந்தையில் ஏற்றி விடுகின்றார்கள். உதாரணமாக, டொக்டர் மாப்பிள்ளைக்கு 20 இலட்சம் கொடுக்கலாம் என்றால் ஏன் கடையில் வேலை செய்யும் சிப்பந்திக்கு 5 இலட்சம் கொடுக்க முடியாது? போதாக்குறைக்கு, எமது உறவினர்களெல்லாம் வெளிநாட்டு மோகத்தில் அங்கு சென்று உழைத்து, டொலர் டொலராகவும் இங்கு அனுப்பிக் குவித்திருக்கிறார்கள். பணம்தான் பெரிது, பகட்டான கார், டவுனில் வீடு, பெரிய அந்தஸ்து இவைதான் பெரிது என்று சமூகமாகிய நாங்கள் நினைத்திருக்கும்வரை சீதனம் பிரச்சனையாகத்தான் இருக்கும். பார்த்தீர்களா, எப்படி நாம்தான் இப்பிரச்சனையை வளர்க்கின்றோம் என்று.

பெண்கள் இதையெல்லாம் விட்டு விடுதலையாகவேண்டும். வெளியில் வாருங்கள். புதிய முயற்சிகளில் இறங்குங்கள். உங்கள் உள்ளே பூட்டி வைத்திருக்கும் திறன்களை கண்டு பிடித்து வளர்த்துக் கொள்ளுங்கள். திருமணம் தானாக வருகின்ற நேரத்தில் வரட்டும். நாம் ஒரு மாற்றத்துக்கு உண்மையாக வாழ்ந்து பார்ப்போமா? அன்பு செய்வோம், சேவை புரிவோம், அறிவை வளர்த்துக் கொள்வோம்.

நாங்கள் அன்றாடம் சந்திக்கும் பெண்களை நீங்கள் வாழ்க்கையில் என்ன செய்ய ஆசைப்படுகிறீர்கள் என்று கேட்டால் அவர்கள் திரு திருவென முழிப்பதைப் பார்க்கலாம். நல்ல நகை சேலைகள் உடுக்க வேண்டும் திருமணம் செய்து கொள்ளவேண்டும். என்பதைத் தவிர வேறொரு ஆசையையும் பெண்கள் மனத்தில் முளைக்க இந்த சமூகம் விடவேயில்லை. என்ன பரிதாபம்.(ஆர்)



அச்சிடுவோர் : ஈகுவாலிடி கிரபிக்ஸ், 315 ஜம்பெட்டா வீதி, கொழும்பு 13. தொ.பே : 2389848

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org